திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இங்கே அங்கத்தினர் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பியபோது 'அது என் ஆய்வில் உள்ளது' என்று சொல்லிவிட்டீர்கள். அது என்ன அறிவிப்பு என்று புரியவில்லை. திரு. மணிமாறன் அவர்கள் சில பிரச்னைகள் குறித்து திரு. துரைமுருகன் மீது எழுப்பி யுள்ளார்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் குழப்பம் அடையக் கூடாது. திரு. மணிமாறன் கொடுத்துள்ள பிரச்னை வேறு. திரு. துரை முருகன் கொடுத்துள்ள பிரச்னைகள் வேறு. இரண்டையும் சேர்த்து, அவர் இவர் மேல் கொடுத்துள்ளார், இவர் அவர் மேல் கொடுத்துள்ளார் என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். (குறுக்கீடு) நான் அறிவிப்பை மீண்டும் படிக்கிறேன். "மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார். மாண்புமிகு திரு. துரை முருகன் அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த பிரச்னைகள் குறித்து அறிவிப்புக் கொடுத்துள்ளார். இவை என் ஆய்வில் உள்ளன. ஆய்வு முடிந்த பிறகு இவற்றைப் பேரவையில் எடுத்துக்கொள்வதா இல்லையா என்பதற்கான எனது இசைவு குறித்து முடிவு செய்யப் படும்."

இன்றைய தினம் மாண்புமிகு எல். இளையபெருமாள் கூட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அதுவும் என் ஆய்வில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

ஆத்தூர் காவல் துறையினர் ஓர் இளைஞரைத் தாக்கியதாகச் சொல்லப்பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

"15-2-1981 அன்று ஆத்தூர் காவல் துறையினர் 20 வயது ராஜு என்பவரைத் தாக்கியதன் விளைவாக அவரது இரு கண்களும் பாதிக்கப்பட்டு அவர் பார்வை இழந்த காரணத்தால் அப்பகுதி பொது மக்களிடத்திலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு, திருவாளர்கள் சி. பழனி முத்து, திருமதி இராசாம்பாள், நா. சுந்தரராஜ் ஆகியோரிடமிருந்து தீர்மானங்கள் வந்துள்ளன. இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கேறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் போலீசாரின் அத்துமீறிய நடவடிக்கைகளின் காரணமாக திரு. எஸ். செங்கோல் அவர்களின் மகன் ராஜு என்பவருக்கு கண் பார்வை போய் விட்டது. இந்த நிகழ்ச்சி 15—2—1981 அன்று நடைபெற்று இருக்கிறது. ஆத்தூர் நகர பயிற்சி துணை ஆய்வாளர் குணசீலன் மற்றும் அவரைச் சேர்ந்த காவலர்கள் அந்த இளைஞனைக் கைது செய்து, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று கொடூரமான முறையில் தாக்கியதன் காரணமாக, மேற்படி இராஜு என்கிற இளைஞரின் இரண்டு கண்களும் பாதிக்கப்பட்டு, ஆத்தூரில் சிகிச்சை பெற்றும் அது சரியாகாத காரணத்தால், மேல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். அவருடைய எதிர்காலத்தையும், அவருடைய குடும்பத்தின் எதிர்காலத்தையும் பாதிக்கக்கூடிய அளவில் அவருடைய இரண்டு கண்களும் பார்வை இழந்து போய் இருக்கிறது.

[முற்பகல் 10—30.]

அந்த போலீசார் எந்தவிதமான முன் அறிவிப்பும் இன்றி, அந்த செங்கோல் மகன் ராஜு என்பவரை அழைத்துச் சென்று, அடித்து, துன்புறுத்தி, உதைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக அந்த நபருக்கு கண் பார்வை இழக்க நேரிட்டுள்ளது. ஆகவே, குற்றம் செய்தவர்களை உடனடியாக அந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். பாதிக்கப்பட்ட ராஜு என்பவருக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். அது மட்டுமல்ல. போலீசார் அத்துமீறிய செயல் ஆத்தூர் நகரில் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சனை குறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அரசுக்குக் கிடைத்துள்ள தகவல்படி 15—2—1981 அன்று காலை 8 மணி அளவில் ஆத்தூர் காவல் நிலையம் முன்பு பொது இடத்தில் செங்கோல் மகன் ராஜு தொல்லை கொடுத்ததாகவும், அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, சிறு வழக்கு எண். 91/81-ல் தமிழ்நாடு நகரக் காவல்துறைச் சட்டப் பிரிவு 75-ன் கீழ் (செக்ஷன் 75 MCP) வழக்கு பதிவு செய்யப்பட்டது. பிறகு, ஆத்தூர் வட்டாட்சி அலுவலகத்தில் கடைநிலை ஊழியராகப் பணிபுரியும் ராஜுவின் தந்தை செங்கோல் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ராஜு ஜாமீனில் விடுவிக்கப்பட்டு, 16—2—81 அன்று ஆத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். 18—2—81 அன்று, சேலம் மாவட்ட கடைநிலை ஊழியர்கள் சங்கம், ராஜுவை போலீசார் அடித்ததாகவும், அவன் கண்பார்வை இழந்துவிட்டதாகவும் புகார் செய்தனர். உடனே இதை மேட்டூர் கோட்டாட்சியாளர் முன்

1981 மார்ச் 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

விசாரணை செய்யும்படி பணிக்கப்பட்டார். இவ்விசாரணையில், போலீசார் மீது வந்துள்ள புகாரை ஒட்டி, பி.எஸ்.ஓ. 145 பிரிவின்படி, விரிவான விசாரணை செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆணையிடப்பட்டுள்ளது.

கண்பார்வை மங்கலாக இருக்கிறது என்று புகார் செய்த ராஜு, சேலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, தற்போது கண் மருத்துவர் இவரின் பார்வை 75 சதவீதம் திரும்பி விட்டது என்று கருத்துத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பெற்றால், இயல்பான கண்பார்வையை மீண்டும் பெறுவார் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார். ராஜுவின் கண் பார்வை தற்காலிகமாக இழந்ததற்கான காரணம், மருத்துவ ரீதியில் ஆராயப்பட்டு, 4 அல்லது 6 வாரங்களில் அறியப்படும் என்று கண் மருத்துவர் கூறுகிறார். ஆகவே, விசாரணை அறிக்கை கிடைத்தபின் இச்சம்பவத்தைப் பற்றி முழுத் தகவலும் கிடைக்கப்பெறும்.

இது குறித்து, மக்களிடையேயும், அரசு ஊழியர்களிடையேயும் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது என்பது சரியல்ல. மேற்கூறிய காரணங்களால் இச்சம்பவம் குறித்து விவாதிக்க சட்டமன்றப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

உதகமண்டலம் மருத்துவமனையில் ஒரு சிறுவனுக்கு ஏற்பட்ட மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப்பற்றி திருவாளர்கள் இரா. கருப்பையா, மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன், ப. பொன்னுரங்கம், எம். ஆறுமுகம் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. இரா. கருப்பையா: தலைவரவர்களே, '' 18—2—1981 அன்று உதகமண்டலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாராயண்லால் என்ற சிறுவன் மர்மமான முறையில் மரணம்